IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

O.S.No.36/2024

dated : 25.08.2025

P.W.1

Name சுந்தரி

சாட்சி மீண்டும் மனுவின்பேரில் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

சண்முகசுந்தரம் என் பெற்றோரிடம் பெண் கேட்டு பெரியோர்கள் ஏற்பாட்டில் திருமணம் நடைபெற்றது. திருச்செந்தூரில் வைத்து திருமணம் நடைபெற்றது. திருமணப்பத்திரிக்கை அடிக்கவில்லை. திருமணத்தை பதிவு செய்யவில்லை. திருணமத்தின்போது எடுக்கப்பட்ட புகைப்படம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சண்முகசுந்தரத்தின் பெற்றோர் எவரும் பெண் கேட்டுவரவில்லை. சண்முகசுந்தரம் என் சகோதரருக்கு பழக்கம். நானும் சண்முகசுந்தரமும் வெவ்வேறு சமூகத்தைச் சார்ந்தவர்கள் என்றால் சரிதான். சண்முகசுந்தரத்திற்கு திருமணத்தின்போது வயது 55 என்றால் சரியல்ல. என்னுடன் திருமணம் ஆனபோது வயது எத்தனை என்பது தெரியாது. திருமணத்தின்போது யார் யார் கலந்து கொண்டார்கள் என்பதை வழக்குரையிலோ, முதல்நிலை விசாரணையிலோ கூறவில்லை என்றால் சரிதான். எனது முதல்விசாரணை வாக்குமூலம் பத்தி -3 ல்" அதன் பின் தொழில்நிமித்தமாக நானும், எனது கணவரும் வடமலை சமுத்திரம்

கிராமத்தில் வாழ்ந்து வந்தோம்" என்று கூறப்பட்டுள்ளது என்னால் கூறப்பட்டதல்ல. 14.12.1998 ல் சிவந்திபுரம் கூட்டுறவு நகர வங்கியிலும், அம்பாசமுத்திரம் கூட்டுறவு வங்கியிலும் அடமானம் வைத்ததாக கூறியிருக்கிறேன் என்றால் சரிதான். அந்த அடமான தொகையை தொழிலுக்கு கடனாக வழங்கினேன் என்று எனது முதல்விசாரணை பத்தி-4 ல் கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அவ்வாறு கூறப்பட்டிருந்தால் அது நான் கூறியதல்ல. அம்பாசமுத்திரம் கூட்டுறவு வங்கியில் அடமானம் வைக்கப்பட்டது என்றால் சரியல்ல. சிவந்திபுரத்தில் மட்டும் தான் அடமானம் வைக்கப்பட்டது. அம்பாசமுத்திரம் கூட்டுறவு நகர வங்கியில் சொத்தை அடமானம் வைத்ததாக வா.சா.ஆ.4 முதல் வா.சா.ஆ 6 தாக்கல்செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதை நான் என் வழக்கறிஞருக்கு கொடுத்ததில்லை. சிவந்திபுரம் வங்கியில் அடமானம் வைத்த சொத்து என்னுடையதாகும். அந்த சொத்துஎனக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு என்னிடம் ஆவணங்கள் உள்ளது. நீதிமன்றத்தில் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சிவந்திபுரம் கூட்டுறவு வங்கியில் உள்ள வங்கிக்கணக்கு எந்த ஆண்டு துவக்கப்பட்டது என்பது தெரியாது. வங்கிக்கணக்கு புத்தகம் என்னிடம் உள்ளதா என்பதை தேடிப்பார்க்கவேண்டும். என்னுடைய வங்கி கணக்கு புத்தகத்தை தாக்கல் செய்தால்அதில் என் கணவர் பெயர் துலங்கும் என்றால் சரிதான். அதை தாக்கல் செய்ய தயார் தான்.

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.08.25 17:56:30 +0530